Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 79

வெள்ளிக்கிழமை
13 பெப்ரவரி 2026

தை 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

ஈஸ்டர் தாக்குதல்:

## விசாரிக்க விசேட நீதிமன்றம்

கொழும்பு, பெப். 13
ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்காக விசேட மேல் நீதிமன்றம் ஒன்று நிறுவப்பட்டுள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு >>> 11

சுதந்திர தினத்தன்று

# யாழ்.பல்கலையில் கறுப்புக்கொடி சட்ட நடவடிக்கை விரைவில்

### பல்கலைக்கழக மானியங்கள் ஆ.குழு தீர்மானம்

**யாழ்ப்பாணம், பெப்ரவரி 13**

**ஸ்ரீ லங்காவின் சுதந்திர தினத்தன்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கறுப்புக்கொடி ஏற்றிய மாணவர்களுக்கு எதிராக இம்முறை கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.** >>> 11

## காணி விடுவிப்புத் தாமதத்துக்கு அரச அதிகாரிகளே காரணமாம்!

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், பெப். 13
வடமாகாணத்தில் காணி விடுவிப்புப் பணிகள் தாமதமடைவதற்கு அரச அதிகாரிகளின் இழுத்தடிப்பும், நிதி ஒதுக்கீடுகள் அற்ற நிலையுமே காரணம் - இவ்வாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் >>> 11

இந்தவருடத்தில் இதுவரை

## 358,000 சுற்றுலாவிகள் இலங்கைக்கு வருகை!

கொழும்பு, பெப். 13
ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் பெப்ரவரி மாதம் 8ஆம் திகதிவரை இலங்கைக்குள் 3 லட்சத்து 58 ஆயிரத்து 103 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.
இது தொடர் >>> 11

சுயாதீன விசாரணைக்காக

## சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன உடன் பதவிவிலக வேண்டும்!

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, பெப். 13
சுயாதீன விசாரணைக்கு இடமளித்து சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன உடனடியாகப் பதவி விலகவேண்டும் - என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.
ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் இந்த விடயம்தொடர்பில் நேற்று >>> 11

பொது இடங்களில் குப்பை

## ஐந்து மாதங்களில் ரூ.420,000 தண்டம்!

### நல்லூர் பிரதேசசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 13
நல்லூர் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் பொது இடங்களில் குப்பைகளைக் கொட்டும் நபர்களிடம் இருந்து கடந்த ஐந்து மாதங்களில் 4 லட்சத்து 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது என்று நல்லூர் பிரதேசசபையின் தவி >>> 11



ஆனையிறவுப் பகுதியில்

## கண்ணிவெடி அகற்றப்பட்ட 800 ஏக்கர் நிலம் விடுவிப்பு

விரிவு பக்கம்:-11

## காங்கேசன் துறைமுகத்தை இந்தியாவுக்கு வழங்கச் சதி

### விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 13
காங்கேசன்துறை, திருகோணமலை துறைமுகங்களை இந்தியாவுக்கு வழங்குவதற்கு சதி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார். >>> 11

அல்லைப்பிட்டி துப்பாக்கிச்சூடு

## கொலையுண்டவரின் சடலத்துடன் உறவினர்கள் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 13
ஊர்காவற்றுறைப் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவரின் சடலத்துடன் உறவினர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
உயிரிழந்த நபரின் இறுதிக் கிரியைகள் வட்டுக்கோட்டை சித்தங்கேணியிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்றன. இதையடுத்தே, சம்பவத்துடன் தொடர்புடைய >>> 11



முச்சந்தி முனி

"வெள்ளிக்கிழமையெண்டால் மச்சமில்லையாம் வேலியடைக்கக் காசு மிச்சமில்லையாம்!"

## செட்டிகுளம் மருத்துவமனையின் குறைபாடுகள் களையப்படும்

### பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவிப்பு

வவுனியா, பெப். 13
வவுனியா செட்டிகுளம் மருத்துவமனையிலுள்ள குறைபாடுகள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்படும் என்று பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்தார்.
வவுனியா வெங்கலசெட்டிகுளம் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போது பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க மேலும் >>> 11

'சதொச' மோசடிகள் தொடர்பில்

## ஜோன்ஸ்டனுக்கு எதிராக மார்ச் மாதம் விசாரணை!

கொழும்பு, பெப். 13
சதொசவில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில், முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவருக்கு எதிரான வழக்கின் சாட்சியங்கள் தொடர்பில் மார்ச் மாதம் 6ஆம் திகதியில் இருந்து விசாரணைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
2010ஆம் ஆண்டுமுதல் >>> 11

மக்கள் ம... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 12.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4345 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 07 24 33 53 |
| விசேட எழுத்து | H |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 12.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1412 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 02 44 58 61 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 12.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0371 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 4 5 0 3 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 12.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2451 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 21 |
| வெற்றி இலக்கங்கள் | 18 22 69 72 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 12.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6103 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 9 2 5 0 5 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 12.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2133 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 50 51 52 58 |
| விசேட எழுத்து | O |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 12.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0219 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 43 46 |

# மருந்துத் தட்டுப்பாட்டைத் தவிர்க்க மாதந்தோறும் மீளாய்வு கட்டாயம்

## சுகாதாரப் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.13**

**நாட்டிலுள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் மருந்துகளின் தொடர்ச்சியான விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்காக மாதந்தோறும் 'மருந்து மீளாய்வுக் கூட்டங்களை' நடத்துவது கட்டாயமாக்கப்படவேண்டும் என சுகாதாரப் பிரதி அமைச்சர் மருத்துவர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.**

மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் நிலையை முன்கூட்டியே கண்டறிந்து, அதற்குரிய தீர்வுகளை விரைவாகக் காண இந்த மீளாய்வுக் கூட்டங்கள் உதவும். மத்திய விநியோகத்தில் தாமதம் ஏற்படும்போது, பிராந்திய மட்டத்திலான கொள்வனவுகள் மூலம் மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்து இருப்பைத் தடையின்றிப் பேணமுடியும்.

அனைத்து நேரங்களிலும் தேவையான அளவு மருந்து இருப்பை உறுதிப்படுத்துவதன் மூலம், பொதுமக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களுக்கு நிலையான தீர்வை வழங்கமுடியும். மருத்துவமனை நிர்வாகங்கள் மற்றும் மருந்தாளர்கள் இணைந்து செயற்படுவதன் மூலம் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கமுடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

# தேர்தல் ஆணைக்குழுவின் புதிய 'ஈ'-சேவை அறிமுகம்

## வாக்காளர் பட்டியலை ஒன்லைனில் சரிபார்க்கலாம்

கொழும்பு, பெப்.13

2026ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிப்புப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், பொதுமக்கள் தங்களின் விவரங்களை மிகவும் இலகுவாகச் சரிபார்ப்பதற்கும், திருத்தங்களை மேற்கொள்வதற்கும் 'ஈ-சேவை' என்ற புதிய இணையத்தள வசதியைத் தேர்தல் ஆணைக்குழு அறிமுகப்படுத்தியுள்ளது.

பொதுமக்கள் தங்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளீடு செய்வதன் மூலம், தங்களின் பெயர் தற்போதைய வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பதைச் சரிபார்க்கலாம். 18 வயது பூர்த்தியடைந்த தகுதியுடையவர்கள், பட்டியலில் பெயர் விடுபட்டிருந்தால் இணையத்தளம் ஊடாகவே புதிய பதிவுக் கோரிக்கையைச் சமர்ப்பிக்கமுடியும். பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் அல்லது வீட்டு இலக்கம் ஆகியவற்றில் பிழைகள் இருப்பின், திருத்தக் கோரிக்கைகளை ஒன்லைனிலேயே சமர்ப்பிக்கலாம். இணையவழியில் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகள் நேரடியாக சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தருக்கு அனுப்பிவைக்கப்படும். பொதுமக்கள் https://eservices.elections.gov.lk/ எனும் இணையத்தள முகவரிக்குச் சென்று இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ளலாம் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

# வேலைவாய்ப்பு மோசடி; தம்பதி நேற்றுக் கைது

கொழும்பு, பெப்.13

வெளிநாட்டில் தொழில் பெற்றுத்தருவதாகக் குறிப்பிட்டு நாட்டின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களிடம் இருந்து ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பணத்தை மோசடி செய்த தம்பதியர் சீதுவ பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபரான பெண்ணைக் கைதுசெய்வதற்காக ஒரு வருட காலத்துக்குள் பல தடவைகள் முயற்சித்தபோதும் குறித்த பெண் விசாரணை அதிகாரிகளிடமிருந்து தப்பிவந்த நிலையில் தற்போது கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த மோசடி நடவடிக்கைக்கு உதவியாக இருந்த பெண்ணின் கணவனும் கைதுசெய்யப்பட்டுள்ளார். வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதான 200 ஒப்பந்தங்கள், மருத்துவ நிலையங்களுக்கு அனுப்பும் கடிதங்கள், கதிரியக்க 300 அறிக்கைகள் மற்றும் அதிகளவிலான பரப்புரைப் பத்திரங்கள் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)



# 2,355 கைபேசிகள் கடந்தாண்டு மாயம்

கொழும்பு, பெப்.13

2025ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் சுமார் 2 ஆயிரத்து 355 கையடக்கத் தொலைபேசிகள் காணாமற்போயுள்ளமை தொடர்பில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று உதவிப் பொலிஸ்அத்தியட்சகரும்பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான எப்.யு. வுட்லர் தெரிவித்துள்ளார்.

இவற்றை ஒரு சில குழுவினர் குற்றச்செயல்களுக்கும், சட்டவிரோதச் செயல்களுக்கும் பயன்படுத்துவது விசாரணைகளில் வெளிக்கொணரப்பட்டுள்ளது. பொதுமக்கள் தமது கையடக்கத் தொலைபேசி காணாமற்போனாலோ அல்லது திருடப்பட்டாலோ, அது மற்றொரு தரப்பினரின் கைக்குச் செல்லும்போது பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பிரதானமாக நிதித் தகவல்கள், தனிப்பட்ட புகைப்படங்கள் தவறாகப் பயன்படுத்தப்படலாம். தொலைபேசி காணாமற்போவதற்கு முன்னரே பொலிஸாரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள www.ineed.police.lk என்ற இணையத்தளத்தில் அவற்றைப் பதிவுசெய்து கொண்டால் தொலைபேசியைக் கண்டறியப் பொலிஸார் முன்னுரிமை வழங்குவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி: 12.02.2026 | தினம்: வியாழக்கிழமை | வெற்றி வாரம்: 0811
ஆங்கில எழுத்து: D | வெற்றி இலக்கம்: 9 3 8 4 1 8

**Super Ball**
திகதி: 12.02.2026 | தினம்: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 3077 | ஆங்கில எழுத்து: Z | வெற்றி இலக்கம்: 28 42 47 61

**சனிதா**
திகதி: 12.02.2026 | தினம்: வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து: O | வெற்றி இலக்கம்: 03 28 47 76 | வெற்றி வாரம்: 5238

**SASIRI**
திகதி: 12.02.2026 | தினம்: வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 0907 | வெற்றி இலக்கம்: 26 33 43

**லக்ன ராசி**
திகதி: 12.02.2026 | தினம்: வியாழக்கிழமை
மிதுனம் | வெற்றி இலக்கம்: 05 06 07 54 | சீட்டிழுப்பு வாரம்: 4789

**KAPRUKA**
திகதி: 12.02.2026 | தினம்: வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து: W | சுப்பர் இலக்கம்: 09 | வெற்றி இலக்கம்: 03 14 33 66 | வெற்றி வாரம்: 2253

**அத கோடிபதி**
திகதி: 12.02.2026 | தினம்: வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து: P | வெற்றி இலக்கம்: 21 33 72 73 | வெற்றி வாரம்: 2903

# ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் இலங்கை ஆமை வேகம்

## ஆய்வில் தகவல்

கொழும்பு, பெப்.13

இலங்கை செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தை படிப்படியாக ஏற்றுக்கொண்டாலும் உலகளாவிய சராசரியுடன் ஒப்பிடும்போது மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது என்று மைக்ரோசொப்ட் பொருளாதார நிறுவனத்தின் புதிய அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

2025 ஆரம்பத்தில் 6.2 வீதமாக இருந்த இலங்கையர்களின் ஏ.ஐ. பயன்பாடு, ஆண்டிறுதியில் 6.6 வீதமாக உயர்ந்துள்ளது. இது ஒரு முன்னேற்றம் என்றாலும், உலகளாவிய சராசரியான 16 வீதத்துடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவானதாகும்.

உலகளாவில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் மற்றும் வளர்ந்துவரும் நாடுகளுக்கு இடையே தொழில்நுட்ப இடைவெளி அதிகரித்துவருகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை, நிபுணர்கள் ஏ.ஐ. யினை மேலும் அணுகக்கூடியதாக மாற்றவும், மலிவு மற்றும் உள்ளூர்மயமாக்கப்பட்ட ஏ.ஐ. கருவிகளை ஊக்குவிக்கவும், தொழில்நுட்பத்துக்கான குறைந்த அணுகல் உள்ள சமூகங்களின் பரந்த பங்கேற்பை ஊக்குவிக்கவும் பரிந்துரைக்கவேண்டும்.

இந்தத் திட்டங்களை விரைவாகச் செயற்படுத்தாவிட்டால், வேகமாக வளர்ந்துவரும் உலகளாவிய ஏ.ஐ. பொருளாதாரத்தில் இலங்கை மேலும் பின்தங்கியிருக்கும் அபாயம் ஏற்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அக்கரைவெளிப் பாலத்துக்கு 65 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

**முல்லைத்தீவு, பெப்.13**

**முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை மாவட்ட எல்லைக் கிராம விவசாயிகள் எதிர்நோக்கும் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக, அக்கரைவெளிப் பாலத்தை நிர்மாணிக்க 65 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி மற்றும் தென்னமரவடி விவசாயிகள் தமது நிலங்களுக்குச் செல்லும் 16 கி.மீ. தூரமான கோட்டைக்கேணி அக்கரைவெளி வீதி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

சுமார் 2000 ஏக்கருக்கும் மேற்பட்ட நெற்செய்கை நிலங்களைச் சென்றடையும் இந்த வீதியால் 800க்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வீதி மற்றும் பாலங்கள் சிதைவடைந்துள்ளதால், இம்முறை அறுவடை செய்யப்பட்ட சுமார் 5,000 நெல் மூடைகளை வெளியே கொண்டுவரமுடியாமல் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர் என்று சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, பொறியியலாளர்களின் ஆலோசனையின்படி அக்கரைவெளிப் பாலத்தை அமைப்பதற்கு முதற்கட்டமாக 65 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் இதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ச-246)

## கொக்கிளாய் — புல்மோட்டைப் பாலத்தை சீரமைக்க பட்ஜெட்டில் நிதியொதுக்கீடு

முல்லைத்தீவு, பெப்.13

முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை மாவட்டங்களை இணைக்கும் மிக நீண்டகாலத் தேவையான கொக்கிளாய் புல்மோட்டைப் பாலத்தை நிர்மாணிப்பதற்கு அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற விசேட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பாலத்தை அமைப்பதற்கான சாத்தியவள ஆய்வுப்பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்றுவருகின்றன. இந்த ஆய்வு அறிக்கையை அடுத்த மூன்று மாதங்களுக்குள் முழுமையாக நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் எதிர்வரும் 2027 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பால நிர்மாணத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-246)

## இலங்கையில் வருடாந்தம் 900 சிறுவர் புற்றுநோயாளர்

கொழும்பு, பெப்.13

நாட்டில் வருடாந்தம் சராசரியாக 900 சிறுவர் புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் என்று சிறுவர் புற்றுநோய் அறுவைச் சிகிச்சை மருத்துவ நிபுணர் மஹெந்திர சோமதிலக தெரிவித்துள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான தேசிய புற்றுநோய் பதிவேட்டுத் தரவுகளுக்கமைய 940 சிறுவர் புற்றுநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். 2021ஆம் ஆண்டில் 199 சிறுவர்கள் இந்த நோயால் உயிரிழந்துள்ளனர். உலகளாவிய ரீதியில் சிறுவர்களுக்கு ஏற்படும் நோய்கள் மற்றும் உயிரிழப்புகளில் புற்றுநோய் குறிப்பிடத்தக்களவில் உள்ளது. இது ஆண்டுதோறும் அதிகரித்துவருகின்றது. சிறுவர்களிடையே ஏற்படும் புற்றுநோய்களில் 'லியுகேமியா' எனப்படும் இரத்தப் புற்றுநோய் முதலிடத்தில் உள்ளது. நிணநீர்ப் புற்றுநோய், மூளைக்கட்டி மற்றும் எலும்புப் புற்றுநோய் என்பனவும் பரவலாக அடையாளம் காணப்படுகின்றன. இவ்வாறான நோய்கள் பிரதானமாக சிறுவர்களுக்கு மட்டும் ஏற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

நோயை ஆரம்பத்திலேயே இனங்கண்டு சிகிச்சைகளைத் தொடர்ச்சியாகப் பெறுவதன்மூலம், அதை முழுமையாகக் குணப்படுத்தக்கூடிய வாய்ப்பு 80 சதவீதமாகக் காணப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## பெப்ரவரி மாத அஸ்வெசும கொடுப்பனவு



கொழும்பு, பெப்.13

'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தின் பயனாளிகளுக்கான பெப்ரவரி மாதக் கொடுப்பனவுகள் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது என்று என்று நிதி அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

அனைத்துப் பயனாளிகளுக்குமான பெப்ரவரி மாதத்துக்கான நிதி ஒதுக்கீடுகள் நேற்று வங்கிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன. பயனாளர்கள் தமது வங்கிக் கணக்கினூடாக கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (எ-இ)

## இணையவழியில் முதலீடு; ரூ.61 இலட்சம் இழந்த பெண்

கொழும்பு, பெப்.13

இணையவழி வணிகம் மூலம் பணம் சம்பாதிக்கலாம் என நம்பவைத்து பெண் ஒருவரிடமிருந்து 61 இலட்சத்து 5 ஆயிரத்து 600 ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் இருவர் குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பெண்ணை ஏமாற்றி மோசடிப் பணத்தைச் சந்தேகநபர்களின் வங்கிக்கணக்குகளுக்கு வரவு வைத்துள்ளனர். விசாரணைகளில் சந்தேகநபர் ஒருவரின் கணக்கில் 1,500,000 ரூபா மோசடியாக வரவு வைக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இந்த வங்கிக் கணக்கு பணத்துக்காக அடையாளம் தெரியாத ஒருவருக்கு விற்கப்பட்டிருந்தமையும் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

## பொலிஸ் 'சுட்ட' வடை!

அல்லைப்பிட்டியில பொலிஸ்காரர் மறிக்க, மறிக்க வாகனத்தை ஓடின பெடியனை சுட்டுக்கொண்டது தான் இப்ப இஞ்ச எல்லாரும் கதைக்கிற விசயம். ஒரு வாகனம் நிப்பாட்டாமப் போனால் அதின்ர ரயருக்குச் சுடலாம், இல்லாட்டி முன்னுக்கு இருக்கிற பொலிஸ் சென்றியளுக்குச் சொல்லி அதை மறிச்சு ஆளை அப்பிப் பிடிச்சிருக்கலாம். அதை விட்டிட்டு, சினிமாப் படங்கள் மாதிரி துவக்கை எடுத்துச் சுட்டு, ஆளின்ர தலையைச் சிதற வைக்கிறது எந்தவகையில நியாயம்? அந்தப் பெடியன் பொலிஸ்காரர் நிப்பாட்டச் சொல்ல அதைக் கேக்காமல் தப்பியோட வெளிக்கிட்டது பிழைதான். அந்தப் பெடியனிட்ட லைசென்ஸ் இல்லை. பொலிஸிட்ட பிடிபட்டால், லைசென்ஸ் இல்லாமல் வாகனம் ஓடினதெண்டு, அந்த வாகனத்தை அப்பிடியே பொலிஸ் ஸ்ரேசனுக்குக் கொண்டு போயிருப்பினம். அப்பிடி பொலிஸிட்ட பிடிபடக்கூடாது எண்டுதான் அவன் ஓடியிருக்கிறான். தண்டம் விதிக்கவேண்டிய குற்றத்தில இருந்து தப்பிறதுக்காக ஓடினவனை இப்பிடித் தலைக்கு வெடிவைச்சுக்கொல்லுறது இன்னும்பிழையான விசயம்.

அதைவிட செத்த பெடியனின்ர சொந்தக்காரர் இன்னொரு குண்டையும் தூக்கிப் போடுகினம். அந்தப் பெடியன் கனகாலமா வாகனம் ஓடுறான். ஆனால் இன்னமும் லைசென்ஸ் எடுக்கிற வயசு வரேலை. அதால பொலிஸுக்கு காசைக் குடுத்து, அவையின்ர சப்போர்ட்டோடதான் வாகனத்தை ஓடியிருக்கிறான் எண்டு சொல்லுகினம். பொலிஸ் காரர் சொல்லுறமாதிரி அந்தப் பெடியனும் அவனோட வாகனத்தில வந்தவையும் கள்ளமாடு பிடிக்கிறவை எண்டே வைச்சுக்கொள்ளுவம். அப்பிடி அவை கள்ள மாடு பிடிக்கினமெண்டால், அந்தப் பெடியனிட்ட காசை வாங்கிக்கொண்டு லைசென்ஸ் இல்லாமல் வாக னத்தை ஓடுறதுக்கு சப்போர்ட் பண்ணின பொலிஸ் காரரும் தானே குற்றத்தில உடந்தை? அதைவிடப் பகிடி என்னெண்டால், எந்தப் பொலிஸ் அந்தப்பெடி யனைச் சுட்டதோ, அதே பொலிஸ்தான் உந்தக் கொலையைப் பற்றி விசாரிக்கப் போகினமாம். நல்ல முசுப்பாத்தி தான். பெடியனைச் சுட்டதைவிடவும், தங்களில பிழை இல்லை எண்டு காட்ட பொலிஸ் சுடுகிற வடையளைப் பாக்கேக்க அழுகிறதோ சிரிக் கிறதோ எண்டு தெரியாமல் கிடக்கு. இப்பிடி அவையே சுடுவினமாம், அவையே சாட்சியளைச் சோடிப்பினமாம், அவையே விசாரிப்பினமாம் எண்டிருந்தால் எப்பிடி உண்மை வெளியில வரும்?

பத்து வருசத்துக்கு முந்தி சுலக்சன், கஜன் எண்ட ரண்டு கம்பஸ் பெடியளை கொக்குவில் சந்தியில வைச்சு, பொலிஸ்காரர் சுட்டுச் சாக்காட்டினவை. அதுக்கும் இப்பிடி மறிக்க மறிக்க ஓடினதால சுட்டம் எண்டுதான் பொலிஸ்காரர் சொன்னவை. ஆனால் அது உண்மையில்லை எண்டு உலகத்துக்கே தெரியும். அவையின்ர சாவுக்கும் விசாரணை நடத்துவம் எண்டுதான் அரசாங்கம் சொன்னது. ஆனால் பத்து வருசமாகியும் இன்னும் உவையின்ர விசாரணையும் முடியேலை, அந்தப் பெடியளுக்கு நீதியும் கிடைக்கேலை. இப்ப இந்தப் பெடியனையும் சுட்டுச்சாக்காட்டிப் போட்டு அதேகதை, அதே விசாரணை எண்டு சொல்லி இழுத்தடிக்கப் போயினம். அதோட அல்லைப்பிட்டியில செத்த பெடியனோட வந்த மற்ற ரண்டுபேரையும் பிணையில விட்டிருக்கினம். கடுமையான குற்றம் எண்டால் பிணை குடுத்திருக்க மாட்டினம் தானே. அப்ப பிணையில வாற குற்றம் செய்த ஒருத்தனைத் தான் கேக்க ஆக்களில்லை எண்ட தைரியத்தில இப்பிடிப் போட்டுத்தள்ளியிருக்கினம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி நகர வீதிகளை நவீனப்படுத்த நடவடிக்கை!



## அமைச்சர் தலைமையில் ஆராய்வு

**கிளிநொச்சி, பெப்.13**

**கிளிநொச்சி நகரப்பகுதியில் வீதி விபத்துகளைக் குறைக்கும் நோக்குடன், நான்கு வழிப்பாதைகளை மேலும் விஸ்தரித்து, வீதிச்சமிஞ்சை விளக்குகளைப் பொருத்துவது தொடர்பில் ஆராயப்பட்டன.**

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் பங்கேற்புடன், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் இந்த விடயங்கள் ஆராயப்பட்டன. கிளிநொச்சி நகரப்பகுதியின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், 4 வழிப்பாதைகளிலும் தேவையான இடங்களில் விஸ்தரிப்பை மேற்கொள்வதற்கும், பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிசெய்யப் பாலங்கள் மற்றும் வீதிச் சமிஞ்சை விளக்குகளை அமைப்பது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டன.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குட்பட்ட வீதிகள், பாலங்கள் மற்றும் பிரதேசசபைகளுக்குச் சொந்தமான கிராமிய வீதிகளின் தற்போதைய நிலைமை தொடர்பிலும், முன்னுரிமை அடிப்படையில் புனரமைப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டன. கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, வடக்கு மாகாண பிரதம செயலாளர், அமைச்சின் மேலதிக செயலாளர்கள், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வீதி அபிவிருத்தி மற்றும் நகர அபிவிருத்தித் திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலர்கள், உள்ளூராட்சிமன்றங்களின் தவிசாளர்கள், பொலிஸ் உயரதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-113)

## நீர்வழங்கல் அமைச்சர் கிளிநொச்சி வருகை

கிளிநொச்சி, பெப்.13

வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் மருத்துவர் சுசில் ரணசிங்ஹ கிளிநொச்சிக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்திருந்தார்.

இரணைமடுக்குளத்தைப் பார்வையிட்ட அமைச்சர், தொடர்ந்து காக்காக் கடைச்சந்தியிலுள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் நவீன நீர் சுத்திகரிப்பு நிலையத்தைப் பார்வையிட்டார். அத்துடன் அமைச்சால் விவேகானந்த நகர்ப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட, 15 இலட்சம் ரூபா வீடமைப்புச் செயற்பாடுகளையும் பார்வையிட்டார். (க-113)



## நகுலேஸ்வரத்தில் சிவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப்.13

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலய வளாகத்தில் மகாசிவராத்திரி சிறப்பு நிகழ்வுகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெறவுள்ளன.

தென்னிந்தியப் பாடகர்களான ராகவர்ஷினி, ஸ்ரீதர் சேனா, லக்ஸனா ஆகியோரின் தெய்வீக ஸ்வரங்கள் பக்தி இசைநிகழ்வும், இலங்கையின் முன்னணி இசைக்குழுவான கொழும்பைச் சேர்ந்த கே.கருணாவின் சரிகமா இசைக்குழுவினரின் இன்னிசை நிகழ்வும், நாதஸ்வரக் கலாநிதி.பஞ்சமூர்த்தி குழுவினரின் நாதஸ்வர சங்கமமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-66)

### மகாசிவராத்திரியை முன்னிட்டு

## பருத்தித்துறையிலிருந்து கேதீச்சரத்துக்கு பஸ் சேவை

மகாசிவராத்திரியை முன்னிட்டு, பருத்தித்துறையிலிருந்து மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்துக்கு 5 விசேட பேருந்துச் சேவைகளை முன்னெடுக்க இலங்கை போக்குவரத்துச்சபையின் பருத்தித்துறை சாலை நடவடிக்கை எடுத்துள்ளது. காலை 5 மணி, 7 மணி, 9 மணிக்கும், மாலை 3 மணி மற்றும் 4 மணிக்கும் இந்த விசேட பேருந்துச் சேவைகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-100)

## ஷானியின் பெயரில் போலி மின்னஞ்சல்

கொழும்பு, பெப்.13

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் பெயரில், போலியான மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டுவருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இவ்வாறான மின்னஞ்சல்கள் எவையும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் அனுப்பப்படவில்லை எனத் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தப் போலியான மின்னஞ்சல்கள்மூலம், பெறுநர்களை ஏமாற்றி நிதிமோசடிகளில் ஈடுபடவும், தனிப்பட்ட தகவல்களைச் சட்டவிரோதமாகப் பெறவும் முயற்சி செய்யப்படுவதாக சந்தேகிக்கப்படுகின்றது. இந்த மோசடியில் ஈடுபட்டவர்களைக் கண்டறிந்து சட்டநடவடிக்கை எடுக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## உழைப்பாளர் மதிப்பளிப்பும் பொங்கல் விழாவும்

கிளிநொச்சி, பெப்.13

ஏர் நிலம் தொண்டமைப்பு நடத்தும் மூத்த உழைப்பாளர் மதிப்பளிப்பும் தைப்பூசப் பொங்கல் விழாவும் கிளி/கந்தபுரம் இல.1 அ.த.க.பாடசாலையில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள்வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம்.

**இடபம்:** தேவையான பணம் கிடைக்கும். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். அனுசரித்துச் செல்வது நல்லது.

**கடகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். கணவன் – மனைவிக்கிடையே சிறுசிறு விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**சிம்மம்:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்துவிடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடிவது மகிழ்ச்சி தரும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். தந்தையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற வீண் செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள்.

**மீனம்** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். வியாபாரத்தில் பணியாளர்களால் வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை





## பொய்யாமொழி

**பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்**

**பொருள்:** பொருள் சேர்க்கும்போது பழிக்கு அஞ்சிச் சேர்த்து, செலவு செய்யும்போது பகுத்து உண்பதை மேற்கொண்டால், அவ்வாழ்க்கையின் ஒழுங்கு எப்போதும் குறைவதில்லை.

# ஒரு கொலையும் சில சந்தேகங்களும்

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டிப் பகுதியில் கடந்த 10ஆம் திகதி பொலிஸாரின் கட்டளையை மீறிப் பயணித்த வாகனம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 17 வயதேயான நபரொருவர் கொல்லப்பட்ட சம்பவம், இலங்கையின் சட்டம், ஒழுங்கு எத்தகைய திசையில் பயணிக்கிறது என்ற அச்சத்தை மீண்டும் ஒருமுறை மக்கள் மத்தியில் விதைத்துள்ளது. இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் பொலிஸாரின் சமிக்ஞையை மீறி வாகனத்தைச் செலுத்தியிருக்கிறார். அத்துடன் அவருக்கு 18 வயது நிரம்பவில்லை என்பதால் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியே இத்தனை நாளும் வாகனத்தைச் செலுத்தியிருக்கிறார். சட்டத்தின் பார்வையில் இவையெல்லாம் தண்டனைக்குரிய குற்றங்களே என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால், இந்தக் குற்றங்களுக்கான தண்டனை என்பது துப்பாக்கி ரவைகளால் நெற்றியில் எழுதப்படவேண்டிய ஒன்று அல்ல. ஒரு ஜனநாயக நாட்டில், பொலிஸாரின் பணி சட்டத்தை நிலைநாட்டுவதே தவிர, வீதியிலேயே துப்பாக்கிகளால் தீர்ப்பு வழங்கும் 'நீதிமன்றங்களாக' மாறுவது அல்ல. சமிக்ஞையை மீறிச் செல்லும் வாகனத்தை நிறுத்துவதற்கு ரயர்கள் மீது சுடுவதோ அல்லது நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மடக்கிப் பிடிப்பதோ தான் பொலிஸாரின் கடமையே தவிர, சாரதியின் தலைக்குக் குறிவைப்பது என்பது திட்டமிட்ட படுகொலைக்கு நிகரான செயலாகும்.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் பொலிஸாரால் முன்வைக்கப்படும் வாதங்களும், பாதிக்கப்பட்ட தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவையாகவே உள்ளன. வாகனத்தில் சான்றுப்பொருள்கள் சோடிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளும், பொலிஸாருக்கு வழங்கப்படவேண்டிய 'இலஞ்சம்' வழங்கப்படாததாலேயே இந்தத் துப்பாக்கிச்சூடு நிகழ்ந்ததாகக் கூறப்படும் தகவல்களும் பொலிஸ் துறையின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குட்படுத்தியுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியது போல, நாட்டில் நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்டமும், அது பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்கும் எல்லையற்ற அதிகாரங்களுமே இத்தகைய அத்துமீறல்களுக்குத் துணிச்சலை வழங்குகின்றன. துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தி ஒரு உயிரைப் பறிப்பதன் மூலம் பொலிஸார் எதனைச் சாதிக்க முற்படுகிறார்கள்? இந்தச் செயல் குற்றத்தைக் குறைப்பதற்குப் பதிலாக, மக்கள் மத்தியில் பொலிஸார் மீதான வெறுப்பையும் பாதுகாப்பற்ற உணர்வையும் மட்டுமே வளர்க்கும்.

அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ உயர் மட்ட விசாரணைக்குத் தயார் என்று அறிவித்திருப்பது ஒருபுறம் ஆறுதல் அளித்தாலும், குற்றம் செய்தவர்களே விசாரணை செய்வார்களா? என்ற கேள்விக்கு இதுவரை பதில் இல்லை. கொல்லப்பட்டவர் எத்தகைய கொடூரமான குற்றவாளியாக இருந்தாலும் சரி, அவரை உயிருடன் பிடித்து நீதிமன்றத்தின் முன் நிறுத்திச் சட்டப்படியான தண்டனையைப் பெற்றுக்கொடுப்பதே நீதியின் ஆட்சியின் அடிப்படைப் பண்பாகும். அதை விடுத்து, வீதியிலேயே ஒருவரின் மூளையைச் சிதைக்கும் வகையில் சுட்டுக்கொல்லும் துப்பாக்கிக் கலாசாரம் தொடருமானால், அது இலங்கையை ஒரு காட்டுமிராண்டித்தனமான நாடாகவே முழு உலகுக்கும் சித்திரிக்கும். அல்லைப்பிட்டிச் சம்பவம் என்பது வெறும் ஒரு விபத்து அல்ல; அது நம் நாட்டு நீதி நிர்வாகக் கட்டமைப்பில் விழுந்த ஒரு பெரும் கறை. இந்தக் கறை துடைக்கப்பட வேண்டுமானால், சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு உரிய தண்டனை வழங்கப்படுவதோடு, துப்பாக்கிப் பிரயோகம் செய்வது தொடர்பில் பொலிஸாரின் அதிகாரங்களும் உடனடியாக மீளாய்வு செய்யப்படுதலும் அவசியமாகும்.




# நீரில் மூழ்கி இறப்போரின் எண்ணிக்கை அதிகரிப்பு!

## கடந்தாண்டில் 338 பேர் பலி

**கொழும்பு, பெப்.13**
**நீரில் மூழ்கி கடந்த வருடம் மாத்திரம் சுமார் 388 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 24 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு. வுட்லர் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
நீரில் மூழ்கி உயிரிழப்பவர்கள் மற்றும் நீர்நிலைகளில் பதிவாகும் விபத்துகளின் எண்ணிக்கையும் வெகுவாக அதிகரித்துள்ளது. சுற்றுலாப்பயணிகள் அதிகளவில் வரும் நீர்நிலைப் பகுதிகளில் மேலதிக உயிர்ப் பாதுகாப்பு அதிகாரிகளை நியமிப்பதற்கும், உயிர்க் காப்பு உபகரணங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
நாடு முழுவதும் 31 பொலிஸ் நிலையங்களிலும் பொலிஸ் கடற்படைப் பிரிவினர் இந்தத் திட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இதுவரை 71 உயிர் பாதுகாப்புப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. அத்தோடு இந்தப் பிரிவுகளின்கீழ் சிறப்பு நீச்சல் பயிற்சி அளிக்கப்பட்ட 308 உத்தியோகத்தர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
பழக்கமற்ற நீர்நிலைகள், அவதானம்மிக்க பகுதிகள் என அறிவுறுத்தப்பட்டுள்ள நிலைகளில் நீராடுவதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும் - என்றார். (ச-இ)



## ஐஸ், ஹெரோய்னுடன் இளைஞர் கைது

கொழும்பு, பெப்.13
கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் ஐஸ் மற்றும் ஹெரோய்ன் போதைப் பொருள்களுடன் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கட்டுநாயக்க பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபரிடமிருந்து 108 கிராம் 200 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் 68 கிராம் 320 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.
சந்தேகநபர் ஜாஎல பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## விளக்கமறியல் கைதி தப்பிப்பு

களுத்துறை, பெப்.13
களுத்துறை நீதிவான் நீதிமன்றால் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபர் ஒருவர் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பிச்சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
ஹெரோய்ன் போதைப் பொருளுடன் களுத்துறை பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார். தப்பிச் சென்ற சந்தேகநபரை கைதுசெய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

## பியூமியின் மகனுக்கு மறியல்

இராஜகிரிய பகுதியில் உள்ள வாகன பழுது பார்க்கும் இடமொன்றில் இளைஞர் ஒருவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நடிகையும் மொடல் அழகியுமான பியூமி ஹன்சமாலியின் மகன் உட்பட 7 சந்தேகநபர்களை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 19 முதல் 22 வயதுக்குட்பட்ட இளைஞர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)



## சமன் ஏக்கநாயக்கவின் விளக்கமறியல் நீடிப்பு

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவை எதிர்வரும் 18ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை நிறைவு செய்து திரும்பும்போது லண்டனில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் நடைபெற்ற தனது மனைவியின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டமைக்காகப் பெருமளவிலான அரச நிதியைச் செலவிட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ச-இ)



நாளை
சனிக்கிழமை - தை 30
14.02.2026
சுபநேரம் : 03.33 - 05.03
ராகுகாலம் : 09.33 - 11.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை போக்குவரத்துச்சபையின்

# பருத்தித்துறை சாலையில் சாரதிகள் பற்றாக்குறை!

## பொதுப்போக்குவரத்து பாதிப்பு



**யாழ்ப்பாணம், பெப்.13**

**இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பருத்தித்துறை சாலையில் தொடர்ந்து நீடித்து வரும் சாரதி பணி வெற்றிடம் காரணமாக பேருந்துச் சேவையைச் சீராக முன்னெடுப்பதில் நெருக்கடி காணப்படுகின்றது என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

பொதுப்போக்குவரத்தை நம்பியிருக்கும் பெரும்பாலான பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதுடன் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். பருத்தித்துறை கேவில் மற்றும் பருத்தித்துறை யாழ்ப்பாணம் கடற்கரை வீதியூடான வழித்தடத்தில் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் பாதிப்புகளைத் தினசரி எதிர்நோக்கி வருகின்றனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பொதுமக்கள் உள்ளிட்ட தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றபோதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாதுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் பருத்தித்துறை சாலை நிர்வாகத்திடம் வினவிய போது, பருத்தித்துறை சாலையில் 64 சாரதிகள் பணியாற்ற வேண்டிய நிலையில் 32 சாரதிகளே தற்போது பணியிலுள்ளனர். பருத்தித்துறை சாலைக்குட்பட்ட பல வழித்தடங்களில் பேருந்துச் சேவைகள் இயக்கப்பட்டுவரும் நிலையில் 50 சதவீத சாரதிகளைக் கொண்டே அவை முன்னெடுக்கப்பட்டு வருகிறன. வடமராட்சி வடக்கு மற்றும் கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலும் குறித்த விடயம் தொடர்பில் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டப்பட்டபோதும் எதுவித முன்னேற்றமும் இன்றிக் காணப்படுகிறது. வடபிராந்திய சாலைகளில் அதிக வெற்றிடத்துடன் பருத்தித்துறை சாலையே காணப்படுகிறது.

அந்த அடிப்படையில் புதிதாக நியமிக்கப்படும் சாரதிகளில் குறைந்தபட்சம் 15 பேரையாவது வழங்குமாறு கோரியுள்ளோம். போதிய சாரதிகள் வழங்கப்படும் பட்சத்தில் எமது சாலைக்குட்பட்ட மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்கக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ச-100)

# 45 வருடங்களின் பின்னர் புனரமைக்கப்படும் வீதி

யாழ்ப்பாணம், பெப்.13

சுமார் 45 வருடங்களின் பின்னர் வட்டுக்கோட்டை, இன்பச்சோலை வீதியைப் புனரமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபவானந்தராஜா முதலில் அடிக்கல்லை நாட்டி, புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்துவைத்தார். நிகழ்வில் சங்கானைப் பிரதேச செயலர் கவிதா உதயகுமார், குறித்த பகுதிக்கான கிராம அலுவலர் சிவகுமார், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர், கிராம மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-27)

# பொருளாதார உத்தியோகத்தர்கள்; 34 பேருக்கு புதிய நியமனம்



மன்னார், பெப்.13

மன்னார் பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக (EDO) கடமையாற்றிய 34 பேருக்கு, புதிய நியமனம் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக(DO) கடமையாற்றிய 34 பேர், கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுக்கு மாற்றப்பட்டு, சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்களாக(CO) நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக்கடிதங்களை நாடாளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் மன்னார் பிரதேச செயலகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக வழங்கினார். நிகழ்வில் மன்னார் பிரதேச செயலர் ம.காந்தீபன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜே.ஜுட் மைக்கேல் ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-56)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம்.பெப்.13

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுபெற்ற ஊழியர் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பொது அறையில் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஓய்வு பெற்ற ஊழியர் சங்கத்தின் தலைவர் கந்தசாமி நாகஜெயகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச)

# யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்களின் ஐந்தாவது மாநாடு

கிளிநொச்சி, பெப்.13

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் ஏற்பாட்டில், ஐந்தாவது தடவையாக இடம்பெறும் Agri tech 2026 மாநாடு, யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விவசாய பீடக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் கந்தையா பகீரதன் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில், பொறியியல் பீட பீடாதிபதி, விவசாய பீட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், யப்பான் பல்கலைக்கழகத்திலிருந்து யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் விரிவுரையாளர்கள், விவசாயத்துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகள், விவசாயத்துறை சார்ந்த தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள், வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதந்த விவசாய அமைப்பினர், விவசாயிகள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விவசாய சமூகத்தையும், விவசாய பீட மாணவர்களையும் ஒன்றிணைக்கும் செயற்பாடாக இந்த மாநாடு அமைந்துள்ளது. விவசாயிகள் தங்களுடைய பிரச்சினைகளை முன்வைக்கும் களமாகவும், அவற்றை இறுதியாண்டு மாணவர்கள் தங்களுடைய கற்றல் ஆராய்ச்சியில் எடுத்து தீர்வை நோக்கி நகரும் செயற்பாடாகவும் Agri tech நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (க-113)

# நகுலேஸ்வரத்தில் ஜோதிலிங்க தரிசனம்

யாழ்ப்பாணம், பெப்.12

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் ஏற்பாட்டில் பாரதத்தின் மகிமை வாய்ந்த 12 ஜோதி லிங்கங்களின் தரிசனம் கீரிமலை நகுலேஸ்வரம் ஆலய தெற்கு வீதியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிதொடக்கம் மாலை 8 மணி வரையும், மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 8 மணி வரையும், 16ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் இடம்பெறவுள்ளது. இதேவேளை சிவராத்திரி தினமான 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 முதல் இரவு முழுதும் ஜோதிலிங்கங்களைத் தரிசிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் இருப்பைத் தக்கவைக்க தவறான பக்கம் சாய்கிறார் சஜித்

## அன்னராசா குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், பெப்.13**

**சட்டவிரோத கரைவலை நிறுத்தப்பட்டமைக்கு எதிராகப் போராடும் மீனவர்களுடன், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இணைந்து குரல் கொடுப்பது, அவரது அரசியல் இருப்பைத் தக்க வைக்கவே என்று வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் உறுப்பினர் அன்னலிங்கம் அன்னராசா குற்றஞ்சாட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தற்போதைய அரசாங்கம் சட்டவிரோத கரைவலையை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தமையை வரவேற்கின்றோம். வடபகுதிக் கடலில் இடம்பெறும் சட்டவிரோத அனைத்து மீன்பிடி முறைகளையும் நிறுத்தவேண்டும் என வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர்.

சஜித் பிரேமதாஸவிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்தோம். ஆனால் சஜித் பிரேமதாஸ கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற போராட்டத்தில் கரைவலை மீனவர்களுக்கு ஆதரவாகக் கலந்துகொண்டார்.

இதற்கு வடபகுதி மீனவர்கள் சார்பில் கண்டனம் தெரிவிக்கின்றோம். தனது அரசியல் இருப்புக்காக எதிர்க்கட்சித் தலைவர், சட்டவிரோத மீன்பிடி முறைகளை ஊக்குவிக்கும் போராட்டங்களில் கலந்துகொள்வதை நிறுத்தவேண்டும்- என்றார். (க-20)

# மே, ஜூன் மாதங்களில் மக்கள் கிளர்ந்தெழுவர்

## எதிர்க்கட்சி ஆரூடம்

கொழும்பு, பெப்.13

அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், மக்களின் எதிர்ப்பைச் சமாளிக்க அடக்குமுறைகளைக் கையாளத் தயாராகிவருகிறது. எதிர்வரும் மே அல்லது ஜூன் மாதங்களில் அரசாங்கத்துக்கு எதிராக மிகப்பெரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்படும். இவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவே அவசரகாலச் சட்டம் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்கம் தபால் கட்டணத்தை 20 ரூபாவால் அதிகரித்து, குறைந்தபட்ச முத்திரைக் கட்டணத்தை 70 ரூபாவாக மாற்றியுள்ளது. இன்றைய நவீன தொழில்நுட்பக் காலத்தில் தபால் சேவையைப் பயன்படுத்துவோர் குறைந்துள்ள நிலையில், இந்த விலையேற்றம் பாரம்பரிய தபால் முறையை மேலும் முடக்கும் செயலாக அமையும்.

அரிசி இறக்குமதி செய்யமாட்டோம் என்று கூறிவிட்டு, தற்போது அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வாழ்க்கைச்செலவைக் குறைப்பதாக வாக்குறுதியளித்து ஆட்சிக்குவந்த ஜே.வி.பி. தலைமையிலான அரசாங்கம், இன்று மிகவேகமாக விலைகளை உயர்த்திவருகின்றது.

2027ஆம் ஆண்டு வரை சம்பள உயர்வு வழங்கமுடியாது என ஜனாதிபதி கூறுவது, தேர்தல் மேடைகளில் அவர் அளித்த வாக்குறுதிகளுக்கு எதிரானது.

நாட்டில் தற்போது அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை. மே, ஜூன் மாதங்களில் ஏற்படக்கூடிய மக்கள் போராட்டங்களையும், வேலைநிறுத்தங்களையும் அடக்குமுறை மூலம் ஒடுக்குவதற்காகவே அரசாங்கம் இந்த அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது- என்றார். (ச-இ)



# சிற்பக் கலைஞர் கலாமோகனுக்கு 'கலாபூசணம்' விருது

கொழும்பு, பெப்.13

தென்மராட்சி, மட்டுவில் பகுதியைச் சேர்ந்த பிரபல சிற்பக் கலைஞர் கிருஷ்ணபிள்ளை கலாமோகன், கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட அரச விருது வழங்கும் நிகழ்வில் 'கலாபூசணம்' விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி, கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்த வருடத்துக்கான உயரிய விருதான 'கலாபூசணம்' விருதை வழங்கிக் கௌரவித்துள்ளது. (ச-9)

# மருத்துவ உதவித்தொகையை ஜனாதிபதி நிதியம் அதிகரிப்பு

கொழும்பு, பெப்.13

ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக வழங்கப்படும் மருத்துவ உதவித் தொகையை அதிகரிக்க அதன் ஆளுநர் சபைதீர்மானித்துள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதி செயலாளர் உள்ளிட்ட 7 உறுப்பினர்களைக் கொண்ட ஜனாதிபதி நிதியத்தின் ஆளுநர் சபை கடந்த செவ்வாய்க்கிழமை கூடியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குழுவின் பரிந்துரைகளுக்கமைய தற்போது வழங்கப்படும் மருத்துவ உதவிக் கட்டணங்களைத் திருத்தம் செய்து அந்த உதவித் தொகையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ உதவிகளைப் பெறுவதில் உள்ள கடுமையான நிபந்தனைகளைத் தளர்த்தி, சுகாதார அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு மருத்துவமனையிலும் சிகிச்சை பெறும் நோயாளர்கள் உதவியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அந்த முறைமையை எளிமையாக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகக் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு, ஒரு இலட்சம் ரூபா (ரூ. 100,000) உதவித் தொகையை ஒரே தடவையில் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரச மருத்துவமனைகளில் இதய சத்திரசிகிச்சை மற்றும் கண்புரை சத்திரசிகிச்சைகளுக்காகக் காணப்படும் நீண்ட வரிசைகளைக் குறைப்பதற்கு, ஜனாதிபதி நிதியத்தின் தலையீட்டுடன் துரித வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நிதியத்தின் ஊடாக உதவி பெறுபவர்களின் விவரங்களை மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகள் மட்டத்தில் இணையத்தளத்தில் வெளியிட்டு, வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

# புதிய கனிய வளங்கள் கொள்கையை செயற்படுத்த அமைச்சரவை அனுமதி

கொழும்பு,பெப்.13

திருத்தப்பட்ட தேசிய கனிய வளங்கள் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காகக் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2023ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட தேசிய கனிய வளங்கள் கொள்கையானது தற்போதைய அரசாங்கத்தின் 'வளமான நாடு அழகான வாழ்வு' கொள்கைப் பிரகடனத்தின் 'பேண்தகு வளப் பயன்பாடு - உயரிய அனுகூலங்களைப் பெறல்' எனும் தொனிப்பொருளின்கீழ் உள்ள கொள்கைக் கோட்பாடுகளுக்கு அமைவாக மீண்டும் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.

புதிதாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்தக் கெள்கை, கனிய வளங்களை வெறும் மூலப்பொருள்களாக ஏற்றுமதி செய்யாமல், அவற்றுக்குப் பெறுமதி சேர்த்து ஏற்றுமதி செய்வதன்மூலம் அதிக வருவாயைப் பெறுதல், கனிய வளங்கள் தொடர்பான நவீன மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தரவுக்கட்டமைப்பை உருவாக்குதல், கனிய வளம் சார்ந்த உள்நாட்டுத் தொழிலதிபர்களையும் கைத்தொழிலாளர்களையும் ஊக்குவித்தல், அகழ்வாராய்ச்சிப் பணிகளின்போது சுற்றாடலைப் பேண்தகு முறையில் பாதுகாத்தல், கனிய வள அகழ்வின்போது ஏற்படும் காணி உரிமை தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வுகளைக் காணுதல் ஆகிய விடயங்களை உள்ளடக்கியுள்ளது. (ச-இ)

# கைதடி வடக்கு- நீர்வேலி இணைப்பு வீதியை காப்பெற் வீதியாக புனரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.13

கைதடி வடக்கு நீர்வேலி இணைப்பு வீதியை, காப்பெற் வீதியாகப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் சிவபாதம் கோரிக்கை விடுத்துள்ளார். கைதடி வடக்கு தச்சன்பிட்டி இந்துமயானம் அருகில் ஆரம்பித்து, நீர்வேலியின் பழைய கண்ணாடித் தொழிற்சாலை அருகாக பருத்தித்துறை வீதியுடன் இணைக்கும் குறித்த வீதியானது நீண்ட காலமாகப் புனரமைப்பின்றி, பாலம் மட்டும் அமைக்கப்பட்ட நிலையில் உள்ளது. இந்த வீதி முழுமையாகப் புனரமைக்கப்படும் பட்சத்தில், கைதடியிலிருந்து நீர்வேலி வாழைக் குலைச் சங்கத்துக்கு விவசாயிகள் தமது வாழைக்குலைகளைக் கொண்டுசெல்வதற்கு இலகுவாக அமையும். வலி.கிழக்கில் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திப் பொருள்களை மட்டுவிலில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு இலகுவாகக் கொண்டு செல்லமுடியும். சாவகச்சேரிப் பிரதேச சபையின் ஊடாக இந்த வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு போதிய நிதி வசதிகள் இல்லாத காரணத்தால், வீதி அபிவிருத்தித் திணைக்களம் அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக நிதி ஒதுக்கீடு செய்து, காப்பெற்றாகவோ அல்லது தார் வீதியாகவோ புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (க-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை புனிதநகர் தமிழ் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை மைதானத்தில் அண்மையில் பாடசாலை முதல்வர் கனகசபை இளங்கோவன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பருத்தித்துறை நகர பிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் பிரதம விருந்தினராக பங்கேற்று மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (ச-100)



### 670 மில்லியன் ரூபா செலவில்

## ஆவரங்கால் – தொண்டைமானாறு வீதிப் புனரமைப்புப் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.13

வடக்கு மாகாணத்தில் வீதிக் கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில் பொதுமக்களின் வரிப்பணத்தைப் பயன்படுத்திச் செயற்படுத்தப்படும் 'மறுமலர்ச்சிக்கான பாதை' திட்டத்தின்கீழ் ஆவரங்கால் - தொண்டைமானாறு வீதியின் புனரமைப்புப் பணிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வீதிப் புனரமைப்புக்கான பெயர்ப்பலகையைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர மேம்பாட்டு அமைச்சர் பிமல் ரத்நாயக்க, வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோர் கலந்துகொண்டு திரைநீக்கம் செய்து வைத்து நிர்மாணப்பணிகளை ஆரம்பித்தனர். இந்த வீதி 670.58 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 6.03 கிலோமீற்றர் நீளத்துக்கு முழுமையாகப் புனரமைக்கப்படவுள்ளது. புனரமைப்புப் பணிகள் நிறைவுசெய்யப்பட்டு அடுத்த வருடம் மே மாதம் 12ஆம் திகதி மக்கள் பாவனைக்கு மீளக் கையளிக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெ.றஜீவன், மருத்துவக் கலாநிதி எஸ். ஸ்ரீபவானந்தராஜா, யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன், வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் தவிசாளர் தி. நிரோஷ், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப் பணிப்பாளர் குரூஸ், பிரதேசசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-66-9-26-17)



## கரைதுறைப்பற்றில் பலநோக்கு அங்காடி

முல்லைத்தீவு,பெப்.13

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதுப்பிக்கப்பட்ட அங்காடி நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு நகரில் திறக்கப்பட்டது. நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், உபாலி சமரசிங்க, செல்லத்தம்பி திலகநாதன், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ.உமாமகேஸ்வரன் ஆகியோர் பங்கேற்றனர். (ச-இ)

## கண்பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், பெப்.13

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் அண்மையில் கண்பரிசோதனை முகாம் இடம்பெற்றது. தென்மராட்சிப் பிரதேச செயலகம், நல்லூர் கிங்டம் லயன்ஸ் கழகம், தென்மராட்சிப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஆகியன எஸ்.ரி.எஸ். மருத்துவமனையுடன் இணைந்து இந்த மருத்துவ முகாமை நடத்தின. பரிசோதனையில் கண்புரை ஏற்பட்டுள்ளவர்களுக்கு இலவசமாக சத்திர சிகிச்சை மேற்கொள்ள கழகம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. (ச-9)




பருத்தித்துறை தும்பளை புனித லூர்து மாதா திருத்தல திருவிழாவின் திவ்விய நற்கருணைத் திருவிழாத் திருப்பலியும் ஆராதனையும் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. திருப்பலியின் நிறைவில் புனித லூர்து அன்னையின் திருச்சொரூப பவனி இடம்பெற்றது. (ச-100)





## தரம் பிரிக்கப்பட்ட பொருள்களை மக்கள் வழங்க புதிய நிலையம்!

யாழ்ப்பாணம், பெப்.13

தூய்மையான நகரத்தை எதிர்கால சந்ததிக்குக் கையளிக்கும் நோக்கத்துடன், பருத்தித்துறை நகரசபைக்குச் சொந்தமான இடத்தில் பொதுமக்கள் தரம் பிரிக்கப்பட்ட மீள்சுழற்சிப் பொருள்களை நேரடியாக வந்து வழங்கக்கூடிய சேகரிப்பு நிலையமொன்று நிறுவப்படவுள்ளது.

பருத்தித்துறை நகரசபையின் கழிவு முகாமைத்துவச் செயற்பாட்டின்மூலம் சேகரிக்கப்பட்ட மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருள்கள், மூன்றாம் குறுக்குத் தெருவில் உள்ள நகரசபைக் காணியில் நீண்டகாலமாகச் சேமிக்கப்பட்டுவந்தன.

தற்போது நகரபிதாவின் பணிப்புரையின் பேரில், சுகாதாரக்குழுவினர் இந்தப் பொருள்களை அகற்றி தரம் பிரித்து, மீள்சுழற்சி செய்யும் நிறுவனங்களுக்குக் கையளித்துவருகின்றனர்.

குறிப்பிட்ட இடத்தில் இந்தப் பொருள்களை மக்கள் நேரடியாக வந்து வழங்கக்கூடிய சேகரிப்பு நிலையம் ஒன்று விரைவில் நிறுவப்படும். குப்பைகளை வீதிகளில் கொட்டுவதைத் தடுத்து, அவற்றை முறைப்படி மறுசுழற்சிக்கு அனுப்புதல், நகரத்தின் சுகாதாரத் தரத்தை உயர்த்துதல் என்பன ஊக்குவிக்கப்படும் என்று நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தெரிவித்துள்ளார். (ச-100)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




2026.01.24 சனிக்கிழமை கொழும்பு பத்திரமுல்லையிலுள்ள சுஹீருபாய வளாகத்தில் நடைபெற்ற தேசிய இலக்கிய விழாவில் எமது பாடசாலையின் ஆசிரியர்

### திருமதி நந்தினி ஜென்சன் றொனால்ட்


அவர்கள் சிறுவர் கதை ஆக்கப்போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றமைக்கான தேசிய விருதினைப்பெற்றுள்ளார்.
அவரை எமது பாடசாலைச் சமூகம் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
**அதிபர், ஆசிரியர்கள்,**
**யா/ மிருசுவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை**

(CS 60719N J-1)

## மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்




யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் மணிவிழாக் காணும் எங்கள் ஆசிரியர்

**திரு. ஒப்பிலாமணி விஜயதாசன்** அவர்கள்
**(SLTS - I) (BSc, PGDE, M. Ed)**

எமது கல்லூரியில் அளப்பரிய சேவையாற்றி இன்று (13.02.2026) மணிவிழாக்காணும் ஆசிரியரின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வுகாலம் மேலும் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகிறோம்.

**சேவை விபரம்:**

| | |
|---|---|
| ★ யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் | - 14.12.1987 - 24.01.1990 |
| ★ யா/ விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் | - 25.01.1990 - 06.09.1992 |
| ★ யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி | - 07.09.1992 - 07.01.2014 |
| ★ தென்மராட்சிக் கல்வி வலயம் ஆசிரிய ஆலோசகர் - விஞ்ஞானம் | - 08.01.2014 - 10.02.2015 |
| ★ யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி | - 11.02.2015 - 12.02.2026 |

வாழ்த்துவோர்: **ஆசிரியர் நலன்புரி கழகம்**
**யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி**

(CS/60659) J-1

# 10ம் ஆண்டு நினைவஞ்சலி

## துரைசிங்கம் கோமேஸ்வரி



பத்து ஆண்டுகள் கடந்தும்
உன் அன்பின் வெம்மை
எம் வாழ்க்கையில் இன்னும் குறைவு.
சோர்ந்த நாள்களில்
உன் மடியில் தலை வைத்த
அந்த நிமிடங்கள்
இன்றும் நெஞ்சை நனைக்கின்றன.
அம்மா என்று அழைக்க
ஒரு குரல் தேவைப்படும் போதெல்லாம்
மௌனமே பதிலாகிறது.
உன் கரங்களின் அரவணைப்பு,
உன் வார்த்தைகளின் தைரியம்,
இன்றும் என் நாட்கள் தேடுகின்றன.
நீ இல்லாத உலகில்
வாழ கற்றுக்கொண்டோம், ஆனால்
உன் அன்பில்லாமல்
வாழ பழகவில்லை, அம்மா.
என்றும் உன் நினைவில்.....



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14.10.1956 | 13.02.2016 |

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை**

(CS/31138) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் கூட்டாட்சித்தீர்வே தமிழரின் எதிர்பார்ப்பு

## கஜேந்திரகுமார் எம்.பி.வலியுறுத்து

**யாழ்ப்பாணம், பெப்.13**

**அங்கீகரிக்கக் கூடிய கூட்டாட்சித் தீர்வொன்றை, புதிய அரசியலமைப்பில் கொண்டுவரவேண்டும் என்றே தமிழ்ச்சமூகம் எதிர்பார்க்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.சாவகச்சேரி வடக்கு செல்வவிநாயகர் சனசமூக நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலி லேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கை சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து இன்று வரை தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகளுக்காக தொடர்ச்சியாக பல்வேறு வழிகளில் போராடி வருகின்றனர். தமிழ் மக்களின் எதிர்கால இருப்பு மற்றும் அரசியல் தீர்வு என்பன புதியதொரு அரசியலமைப்பின் ஊடாகவே பெற்றுக்கொள்ள முடியும். வடக்கு, கிழக்குப் பிராந்தியத்தில் வசிக்கும் தமிழ்பேசும் மக்கள் தொடர்ச்சியாக, கூட்டாட்சித் தீர்வை எதிர்பார்த்து இருப்பதை ஒவ்வொரு தேர்தல்களிலும் வெளிப்படுத்தி வருகின்றனர். புதிய அரசியலமைப்பு வரைவு தயாரிக்கப்படும் போது, தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகள் அதில் தெளிவாக உள்ளடங்கப்பட வேண்டும். ஏற்கனவே எல்லோராலும் எதிர்க்கப்பட்ட ஏக்கிய ராஜ்ய வரைவை அல்லது அதுபோன்று ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தீர்வை முன்வைத்து சர்வஜன வாக்கெடுப்புக்காக தமிழ் பேசும் மக்கள் மட்டத்தில் வரும் போது, இத்தனை ஆண்டு இழப்புகள் மற்றும் தியாகங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில், தமிழ் மக்கள் உறுதியாக அதனை எதிர்ப்பதுடன், அதிகாரமற்ற எந்தத் தீர்வையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மாறாக தமிழ்த்தேசமும், அதன் இறைமையும் அங்கீகரிக்கக் கூடிய வகையிலான கூட்டாட்சித் தீர்வை, புதிய அரசியலமைப்பில் கொண்டுவர வேண்டும் என்கின்ற கோரிக்கையைப் பகிரங்கமாக முன்வைப்பதற்கு நாம்தயாராக இருக்கவேண்டியது அவசியம்-என்றார். சந்திப்பில் தமிழ்த் தேசியப் பேரவையின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். மக்கள் கேட்ட குறை மற்றும் தேவைப்பாடுகளை உரிய முறையில் செய்யக்கூடிய வேலைகள், நாடாளுமன்ற உறுப்பினர் செய்யக்கூடிய வேலைகள் என இரண்டாகப் பிரித்து அதுதொடர்பாக அறிக்கையைத் தனக்கு சமர்ப்பிக்குமாறு உறுப்பினர்களிடம், நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டார். (க-159)

# தொழில்முனைவு அரசே நாட்டை மீட்டெடுக்கும்!

## திலித் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, பெப்.13

நாட்டு மக்களுக்கு செல்வம் ஈட்டும் வழிகளை உருவாக்கவேண்டும் என்றால் அதற்கான தீர்வு 'தொழில்முனைவு அரசு' என்ற எண்ணக்கருவை செயற்படுத்துவதே என சர்வஜன அதிகாரம் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஒவ்வொரு மனிதனின் கைக்கும் பணம் செல்லவேண்டும். இம்முறை சம்பளம் அதிகரிக்கும் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இலங்கையில் சம்பளம் அதிகரிக்கப்பட்டாலோ அல்லது 'அஸ்வெசும' அதிகரிக்கப்பட்டாலோ செய்யவேண்டியது ஒன்றுதான். அதற்கு ஒரு வாரத்துக்கு முன்பு கடைக்குச் சென்று பொருள்களின் விலைகளை எழுதிக்கொள்ளுங்கள். சம்பளம் அதிகரித்த பிறகு மீண்டும் கடைக்குச் சென்று விலைகளை எழுதிக்கொள்ளுங்கள். கட்டாயமாக அத்தியாவசியப் பொருள்களுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கும். வறுமை ஒழியும் வழிமுறையொன்றை நாம் கண்டறியவேண்டும். ஒவ்வொருவரையும் தனித்தனியாக மீட்டெடுத்து, குறிப்பாக பெண் தொழில்முனைவோரை மீட்டெடுத்து நாம் முன்னேற வேண்டும்-என்றார். (ச-இ)

## வேலை ஆட்கள் தேவை

இணுவிலில் அமைந்துள்ள ஸ்ருடியோ ஒன்றிற்கு
அலுவலக வரவேற்பாளர் (பெண்)
புகைப்படக்கலைஞர் (ஆண்) தேவை.
அனுபவம் உள்ளவர்கள் / பழக விரும்புபவர்களும்

தொடர்புகளுக்கு: 077 930 7412

# சம்பள உயர்வுக்குப்பின்னரே ஏனைய கொடுப்பனவுகள்!

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.13

அரச ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்கப்படுகின்றது என்றும், 2027 ஆம் ஆண்டில் மூன்றாவது கட்ட சம்பள உயர்வு வழங்கப்பட்ட பின்னர் ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்படும் என்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். நுவரெலியாவில் நடைபெற்ற 'ஒன்றாகச் செயற்படும் தேசிய வேலைத்திட்ட' நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தற்போது கொடுப்பனவுகள் தொடர்பாகத் தீவிர மீளாய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தமக்குக் குறுகிய கால அவகாசத்தை வழங்க வேண்டும். 2025 மற்றும் 2026 ஆண்டுகளில் வழங்கப்பட்ட சம்பள உயர்வுகளைத் தொடர்ந்து, 2027 இல் அடுத்த கட்ட உயர்வு வழங்கப்படும் போது அனைத்துக் கொடுப்பனவுச் சிக்கல்களும் தீர்க்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 07 1925



மறைவு 10 02 2026

**திருமதி.றோஸ் நேசரத்தினம் செல்வரத்தினம்**

யாழ் அளவெட்டியை பிறப்பிடமாகவும், தற்போது கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றோஸ் நேசரத்தினம் செல்வரத்தினம் அவர்கள் 10.02.2026 செவ்வாய்க்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் செல்லையா (Dispensar) சூசன் நேசமணி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான கேபிரியல் அப்பையா, எலிசபெத் பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அப்பையா ஜோன் செல்வரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், இரத்தின சோதி, ஜெபநேசன். காலஞ்சென்ற அருள்நேசன். ஜெயசோதி (Australia) ஆகியோரின் பாசமிகு தாயாரும். நாகேந்திரன், சுகிர்தமலர், தவக்குமார் (Australia) ஆகியோரின் மாமியாரும், நிறோஷன், ஜெரூஷன், றொஷான் (பிருத்வி), போஷியா (உஷாந்த்), நேத்தன் ஆகியோரின் அருமைப் பேத்தியும், ஜெவன், கேட்டலின் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காகவும், அஞ்சலிக்காகவும், கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று **13.02.2026** காலை **9.00** மணி முதல் மாலை **4.30** மணி வரை வைக்கப்பட்டு. ஆராதனை நடைபெற்ற பின்னர், இறுதி ஆராதனை மற்றும் நல்லடக்கத்திற்காக யாழ்ப்பாணம் எடுத்துச்செல்லப்படும்.பின்னர் **White House** மலர்ச்சாலையில் **14.02.2026** சனிக்கிழமை காலை **9.30** மணி முதல் மதியம் **1.45** மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, **2,00** மணிக்கு இறுதி ஆராதனை நடைபெற்ற பின்னர், அளவெட்டி அமெரிக்கன் மிஷன் சேமக்காலையில் அன்னாரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:
Niroshan (மகன்) : [illegible]
ஜெயசோதி (மகள்) : 0061410313199

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 06 . 1943



மறைவு 06 . 02 . 2026

**தம்பாப்பிள்ளை யோகானந்தர்**

**(கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் வாழ்நாள் உறுப்பினர், நகைச்சுவை நாடக இயக்குனராக பங்களித்தவர், ஓய்வு பெற்ற மூத்த சட்டத்தரணி)**

G.P.S வீதி, கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும், இங்கிலாந்தின் Colindale பகுதியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாப்பிள்ளை யோகானந்தர் அவர்கள் கடந்த (06.02.2026) வெள்ளிக்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சுகுணா அவர்களின் அன்புக் கணவரும், சோமசேகரம், ராஜமுத்தையா, ராமநாதன், மகேஸ்வரி, சிவாக்கியம், சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், இயன் ஜெயந்தன், நீற்பன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யாஸ்மின் பஹறாம் அவர்களின் அன்பு மாமனாரும், ரோமன் லோகி, அமீலியா சியா, மைல்ஸ் பரன் ஆகியோரின் அன்புப் பேரனார் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (16.02.2026) திங்கட்கிழமை இங்கிலாந்தில் holders hill road, London NW7, 1NB நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

G.P.S வீதி,
கல்வியங்காடு


(CS/31251) J-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனையிறவுப் பகுதியில்

# கண்ணிவெடி அகற்றப்பட்ட 800 ஏக்கர் நிலம் விடுவிப்பு



கிளிநொச்சி, பெப்.13
போர் காரணமாக சுமார் 800 ஏக்கர் பரப்பளவிலான நிலப்பகுதி கண்ணிவெடி அபாயம் உள்ள பகுதியாகக் காணப்பட்ட நிலையில் சுவிஸ் அமைப்பின் நிதியுதவியுடன் DASH அமைப்பு மேற்கொண்ட துரித நடவடிக்கையால் அந்த நிலப்பரப்பு தற்போது முழுமையாக விடுவிக்கப்பட்டு பாதுகாப்பான நிலமாக மாற்றப்பட்டுள்ளது.
இதனூடாக அப்பகுதியின் உப்பு உற்பத்திப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கப் பெரிதும் உதவியுள்ளதுடன் இதன் மூலம் உள்ளூர் பொருளாதாரமும் வேலைவாய்ப்புகளும் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளன.
சுவிட்ஸர்லாந்தை தலைமையிடமாகக் கொண்ட 'கண்ணிவெடிகள் இல்லாத உலகம்' அமைப்பின் பிரதிநிதிகள் குழு, ஆனையிறவு குறிஞ்சாத்தீவுப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணிகளை அண்மையில் நேரில் பார்வையிட்டனர்.
இந்தக் கள விஜயத்தைத் தொடர்ந்து, இந்தக் குழுவினர் கொழும்பிலுள்ள தேசிய கண்ணிவெடி நடவடிக்கை மையத்துக்குச் சென்று, அதன் இயக்குநர் என். எம். நயுமுதீன் உள்ளிட்ட அதிகாரிகளுடன் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடினர். (ச-214)

## விசாரிக்க...

அமைச்சு தெரிவித்துள்ளது. கொழும்பு 07, பௌத்தாலோக மாவத்தையில் உள்ள அரச கட்டடங்களில் அந்த நீதிமன்றம் இயங்கவுள்ளது. இந்த நீதிமன்றத்துக்குத் தேவையான வசதிகள் வழங்குவதை விரிவுபடுத்துமாறு நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு நேற்று அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (அ-ம)

## பல்கலையில்...

ஸ்ரீலங்காவின் சுதந்திரதினத்தை கரிநாளாக அறிவித்து தமிழர் தாயகத்தில் இம்முறை போராட்டங்களும் பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டன. இதைமுன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கறுப்புக்கொடி பறக்க விடப்பட்டிருந்தது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அண்மைய கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், கறுப்புக்கொடி ஏற்றிய மாணவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
கடந்த வருட சுதந்திர தினத்தன்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. இது தொடர்பில் வழங்கப்பட்ட புலனாய்வுத் தகவல்களைத் தொடர்ந்து, இந்த விடயத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? என வினவி சம்பந்தப்பட்ட மாணவர்களின் ஒளிப்படங்களுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு கடிதம் அனுப்பியிருந்தது. எனினும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் எந்தவொரு நடவடிக்கையுளம் எடுக்கவில்லை. இது தொடர்பிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அண்மைய கலந்துரையாடலில் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.
அத்துடன், எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் இடம்பெறாமல் எவ்வாறு தவிர்ப்பது என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ளது. இது தொடர்பாகவும் விசேட அறிக்கையொன்றை வழங்குமாறு பல்கலைக்கழகத்தைக் கோரவுள்ளது என்றும் தெரியவருகின்றது. (அ-ம)

## சபாநாயகர்...

மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கை அரசியல் வரலாற்றில் மிகச் சிறப்பாகச் செயற்பட்ட பல சபாநாயகர்கள் உள்ளனர். ஆனால், தற்போதைய சபாநாயகர் மோசமாக நடந்துகொள்கின்றார். ஆளுங்கட்சிக்கு சார்பாகவே அவரது செயற்பாடுகள் அமைந்துள்ளன.
சபாநாயகருக்கு எதிராக நாடாளுமன்றத்தின் பிரதி செயலாளர் ஒருவர், இலஞ்ச, ஊழல் தடுப்பு விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். அது தொடர்பில் இலஞ்ச, ஊழல் தடுப்பு விசாரணை ஆணைக்குழு விசாரணையை முன்னெடுக்குமானால் சபாநாயகர் பதவி விலக வேண்டும். இலஞ்ச, ஊழல் தடுப்பு விசாரணைக்குழுவின் உறுப்பினர்கள் அரசியலமைப்பு பேரவை ஊடாகவே நியமிக்கப்படுகின்றனர். அந்தப் பேரவையின் தலைவராக சபாநாயகரே பதவி வகிக்கின்றார். எனவே, சட்டம் அனைவரும் சமம் என கருதினால் சபாநாயகர் பதவி விலகவேண்டும் - என்றார். (அ-ம-44)

## ஐந்து...

சாளர் பத்மநாதன் மயூரன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
நல்லூர் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் பொதுவிடங்களில் கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுக்கும் முகமாக பல்வேறு இடங்களில் கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்தி தண்டம் அறவிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதனடிப்படையில் குப்பை கொட்டுபவர்களிடம் கடந்த ஐந்து மாதங்களில் 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை இனிவரும் நாள்களிலும் தொடரும். நல்லூர் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளை தூய்மையாக வைத்திருக்க அனைவருடைய ஒத்துழைப்பையும் நாம் கோருகின்றோம் - என்றுள்ளது. (அ-ம-26-66)

## காங்கேசன்...

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-
ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். எதிர்வரும் 19ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமாரவும் இந்தியாவுக்குச் செல்லவுள்ளார். இலங்கையில் உள்ள வளங்களை இந்தியாவுக்கு வழங்கும் வேலைத்திட்டத்தைத் துரிதப்படுத்தவே இவர்கள் இந்தியாவுக்குச் செல்கின்றனர்.
அன்று இந்தியாவுக்கு எதிராகப் போராடிய ஜே.வி.பி.யினர் இன்று அடிக்கடி இந்தியாவுக்குச் செல்வதுடன், இலங்கையின் வளங்களை இந்தியாவுக்குத் தாரை வார்த்து வருகின்றனர். இந்தியாவுடன் திருட்டுத்தனமாக ஏழு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. அவற்றில் என்ன உள்ளது என்பது இதுவரை எவருக்கும் தெரியாது.
அதேவேளை, காங்கேசன்துறை துறைமுகத்தையும் விரைவில் இந்திய மயப்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய திட்டம் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறைதுறைமுகம் மிகநீண்ட காலத்துக்கு இந்தியாவின் வசமே இருக்கக்கூடும் - என்றார். (அ-ம-44)

## செட்டிகுளம்...

தெரிவித்ததாவது:-
வவுனியா - செட்டிகுளம் பிரதேச மருத்துவமனையில் நீண்ட நாள்களாகப் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. மருத்துவர்கள் பற்றாக்குறை, உடற்கூற்று நிபுணர்கள் பற்றாக்குறை என பல விடயங்கள் தொடர்பில் எமக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளன.
உயிரிழந்தவர்களின் சடலங்களை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மக்கள் வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கு எடுத்துச் செல்கின்றனர். அம்புலன்ஸ்களில் சடலங்களை ஏற்றாத காரணத்தால், மக்கள் பெருமளவு பணம் செலுத்தி வாகனங்களை வாடகைக்கு அமர்த்தியே அந்தச் சடலங்களை கொண்டு செல்லவேண்டிய நிலைமை காணப்படுகின்றது.
இந்த விடயங்கள் தொடர்பில் தற்போது அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. இந்த ஆண்டுக்குள் இதற்குத் தீர்வு வழங்கப்படும். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-110)

## ஜோன்ஸ்டனுக்கு...

2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வர்த்தக அமைச்சராகப் பணியாற்றிய போது, சதொச நிறுவனத்தின் ஊழியர்களை சட்டபூர்வமான கடமைகளிலிருந்து விலக்கி, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தினார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.
ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுடன், சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் எராஜ் பெர்னாண்டோ மற்றும் அதன் முன்னாள் பணிப்பாளர் மொஹமட் சாகிர் ஆகியோருக்கு எதிராகவும் இந்த குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.
இந்த வழக்கு நேற்று அழைக்கப்பட்ட போதே, வழக்கின் சாட்சியங்கள் தொடர்பில் மார்ச் மாதம் 6ஆம் திகதியில் இருந்து விசாரணைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## கொலையுண்...

பொலிஸாரைக் கைதுசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தி, உயிரிழந்தவரின் உறவினர்களும் பொதுமக்களும் சடலத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
அதனைத் தொடர்ந்து கொலையுண்டவரின் உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு [illegible] இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இறுதி ஊர்வலம் நடைபெற்ற போது வட்டுக்கோட்டைப் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர். அவர்களுடன் பொதுமக்கள் முரண்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## 358,000...

பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
இலங்கையில் இந்த வருடம் 3 லட்சத்து 58 ஆயிரத்து 103 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இவர்களில் இந்தியாவில் இருந்தே அதிகபட்சமாக 64 ஆயிரத்து 500 பேரும், பிரிட்டனில் இருந்து 38 ஆயிரத்து 823 பேரும், ரஷ்யாவில் இருந்து 34 ஆயிரத்து 80 பேரும் வருகை தந்துள்ளனர்.
இதைவிட, ஜேர்மனியில் இருந்து 23 ஆயிரத்து 177 பேரும், சீனாவில் இருந்து 19 ஆயிரத்து 40 பேரும், பிரான்ஸில் இருந்து 18 ஆயிரத்து 218 பேரும் வருகை தந்துள்ளனர் - என்றுள்ளது. (அ-ம-44)

## காணி...

நடைபெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கலந்துகொண்டு உரையாற்றியுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர், இங்கு தேவைக்கு அதிகமாக உள்ள படையினரைத் திரும்பப்பெறும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. படையினர் முகாமிட்டிருந்த காணிகளை விடுவிக்கப்பட்டு அவற்றை மக்களிடமே வழங்கியுள்ளோம். இதற்கான ஆவணங்கள் அனைத்தும் மாவட்டச் செயலர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.
போர்க் காலத்தில் கைப்பற்றப்பட்ட மக்களின் காணிகளை மீண்டும் கையளிப்பதில் அரசாங்கம் உறுதியுடன் உள்ளது. காணிகளை விடுவிக்கும்போது சில சட்டச் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அது தொடர்பில் நாங்கள் தற்போது அவதானம் செலுத்தியுள்ளோம். சில இடங்களில் காணிகளின் உண்மையான உரிமையாளர்களைக் கண்டுபிடிப்பதும் சிரமத்துக்கு உரியதாகவே அமைந்துள்ளது.
அத்துடன், சில இடங்களில் பிரதேசசெயலர்கள் உரிய ஆவணப்படுத்தல் நடவடிக்கைகளைத் தாமதப்படுத்துகின்றனர். இன்னும் சில இடங்களில் காணிகளை விடுவிக்க நாங்கள் தயாராக உள்ளபோதிலும் வேலிகளை அடைப்பதற்குப் பணம் இல்லை என்கின்றனர். அதிகாரிகளின் இவ்வாறான செயற்பாடுகள் காரணமாகவே பணிகள் தாமதமாகின்றன. ஆனால், காணிகளை விடுவிப்பதில் நாம் அக்கறையுடன் உள்ளோம் - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிவராத்திரியை முன்னிட்டு கேதீச்சரத்தில் முன்னேற்பாடு

மகாசிவராத்திரியை முன்னிட்டு, மன்னார் திருக்கே தீச்சரம் ஆலயத்தில் முன்னேற்பாடு கள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மகா சிவராத்திரி திருக்குடத் திருமுழுக்கு (அபிஷேகம்) பூசை, அர்ச்சனை, அலங்கார மண்டபச் சிறப்பு நிகழ்வு கள் இடம்பெறும். அன்றைய தினம் காலை 5 மணிக்கு திருவந்தல் பூசையுடன் ஆரம்பமாகி, மறுநாள் காலை 5.30 மணிக்கு வசந்த மண்டப அலங்காரப் பூசையைத் தொடர்ந்து எம்பெருமான் தீர்த்தோற்ச வத்துக்கு புனித பாலாவித் தீர்த்தத்துக்கு எழுந்தருளுவார் நண்பகல் 12 மணிக்கு உச்சிக் காலப்பூசை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-60)

# மஹா சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், பெப். 13

கொக்குவில் மேற்கு ஸ்ரீ வாராஹி சனசமூக நிலையமும், இந்து இளைஞர் மன்றமும் இணைந்து நடத்தும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணிக்கு வாராஹி அம்பாள் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

வாராஹி சனசமூக நிலையத் தலைவர் நடேசு ஜெயராஜா தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

ஆசியுரையை வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தின் சி. அகிலேஸ்வரக்குருக்கள் வழங்கவுள்ளார்.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியற்துறை துறைத்தலைவர் தி. திலீபன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்புரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி. ரமணராஜ், இளஞ் சைவப்புலவர் விஸ்ணுயன் வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் சிறப்பு நிகழ்ச்சியாக அளவையூர் ஆரோகணா அரங்கக் கல்லூரி நெறியாளர் து. அயூரனின் நெறியாளால்கையில் இராவணேசன் கூத்து இடம்பெறவுள்ளது.

(ம-40)

யாழ்ப்பாணம் அராலி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில், சிறுமி ஒருவர் 'உதயன்' பத்திரிகையைப் போன்று வேடமிட்டு வினோதவுடைப் போட்டியில் கலந்துகொண்டார். மாணவர்கள் வாசிப்புப் பழக்கத்தைப் பின்பற்ற வேண்டும் என்பது அவர் முன்வைத்த கருத்தாக அமைந்தது. (ம)



# போதைப்பொருள் பணத்தில் ஈட்டிய சொத்துகள் பறிமுதல்

அவிசாவளைப் பகுதியில் போதைப்பொருள் கடத்தல் மூலம் சட்டவிரோதமாக ஈட்டிய பணத்தில் கொள்வனவு செய்யப்பட்டவை எனக் கருதப்படும் 20 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய சொத்துகளைப் பொலிஸார் முடக்கியுள்ளனர். அவிசாவளையைச் சேர்ந்த நபர் ஒருவர் மீது அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டது. சந்தேகநபர் தனது சட்டவிரோத வருமானத்தைக் கொண்டு இரு மாடி வீடு ஒன்றையும், சுமார் 9 பேர்ச் நிலத்தையும் கொள்வனவு செய்துள்ளமை கண்டறியப்பட்டது. இந்தச் சொத்துகள் எவ்வாறு ஈட்டப்பட்டன மற்றும் இதனுடன் தொடர்புடைய ஏனைய நபர்கள் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ச-இ)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு ஆண், பெண் வகுப்பு மேற்பார்வையாளர், கிளார்க் தேவை.

தொடர்புகொள்ளும் நேரம்:
காலை 7.00am - மாலை 5.00pm

தொலைபேசி இலக்கம்:-
075 896 0575

(CS/60714) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 01 . 1942



மறைவு
11 . 02 . 2026

**இராமலிங்கம் பொன்ராசா**

(இளைப்பாறிய முன்னாள் பலநோக்கு கூட்டுறவுச் சங்க கைதடி கிளையின் பொது முகாமையாளர்)

வண்ணார்பண்ணை பெருமாள் கோவிலடியை பிறப்பிடமாகவும், 155, கன்னாதிட்டி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் பொன்ராசா (இளைப்பாறிய முன்னாள் பலநோக்கு கூட்டுறவுச் சங்க கைதடி கிளையின் பொது முகாமையாளர்) அவர்கள் 11.02.2026 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையாச்செட்டியார் - இராசம்மா தம்பதியரின் மருமகனும், இராஜராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜானகியின் அன்புத் தகப்பனாரும், சுரேஸ்வரனின் அன்பு மாமனாரும், லவன், பிரதீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2026) வெள்ளிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.30 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31254) A

## 17ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
03 . 03 . 1958



இறப்பு
20 . 02 . 2009

**அம்பலவாணர் பரமநாதன்**

(தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை, யாழ்ப்பாணம்)

திதி: அபரபக்க ஏகாதசி

அப்பா !
ஆகாதெதுவும் ஆக்கும் பரனே
அதில் வரும் இடரினை
நீக்கும் ஐயனே
என்றும் எங்களோடிருங்கள்.

"திருவதிகை"
அளவெட்டி.

அன்புடன்
பிள்ளைகள்

(CS/60711) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.